# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 48 /2023 | Date : 13.02.2026 | PW 1 |
|---|---|---|
| Name: சுமதி | க/பெ. குமார் | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன எனது கணவருக்கு தொழில், வயது, வருமானம் காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் என் கணவரை எந்த மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேற்படி மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டு நகலில் விபத்து சமயத்தில் எனது கணவர் மது அருந்தி சென்றுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் தான் மேற்படி விபத்து பதிவேட்டு நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் என் கணவர் என்பதால் நஷ்டஈடு வழங்கும் போது அவரது அஜாக்ரையும் கணக்கில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/—சுமதி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.